தீத்து

தீமோத்தேயுவுக்கு முதலாம் நிருபத்தை எழுதியதும் பவுல் கிரேத்தா தீவுக்குச் சென்றார் எனத் தெரிகிறது (தீத்து 1:5). ஏற்கெனவே, இத்தீவில் அநேக விசுவாசிகள் இருந்தார்கள். ஒருவேளை இவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கூடியிருந்த யாத்திரிகர்கள் மூலம் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிருப்பார்கள் (2:11). இந்த விசுவாசிகளுக்கு ஊழியஞ் செய்த பிற்பாடு, பவுல் தனது பயணங்களைத் தொடர்ந்தார். இந்தத் தீவில் தங்கியிருந்து, போதிக்கும் ஊழியத்தையும், பிரசங்கிக்கும் ஊழியத்தையும் தொடர்ந்து செய்யும்படிக்கும், ஒவ்வொரு பட்டணத்திலும் மூப்பர்களை (மேய்ப்பர்களை) நியமிக்கும்படிக்கும் பவுல் தீத்துவை இங்கு விட்டுச் சென்றார் (தீத்து 1:5). இவ்விதமாக, தீத்துவின் ஊழியம், முழுவதுமாக ஒழுங்கு செய்யப்பட்ட வேலையைக் கவனிக்கும்படி விடப்பட்டத் தீமோத்தேயுவின் ஊழியத்திலிருந்து வேறுபட்டதாயிருந்தது.

தீத்துவிலும், 1தீமோத்தேயுவிலும் உள்ள விஷயங்கள் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன, தீத்துவுக்குக் கொடுக்கப்பட்ட, சபைத் தலைவர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான ஆலோசனைகள் (1:5-9), கள்ளப் போதகர்களுடன் இடைபடுவது பற்றிய வழிமுறைகள் (1:11,13; 3:10), தனிப்பட்ட ஊழியத்தைப் பற்றிய ஆலோசனைகள் ஆகியவை தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டப் புத்திமதிகளுக்கு ஒத்ததாகும் (2:7,8,15).

இருப்பினும், தீத்துவுக்கு எழுதின நிருபத்தில், சரியான, ஆரோக்கியமான உபதேசத்தை (கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம்) வெளிப்படுத்தி, கள்ளப் போதகர்களை அம்பலப்படுத்த வேண்டியதின் அவசியத்தைப் பவுல் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

தீத்து: சபைத் தலைவருக்கான ஆலோசனைகள்

1. அறிமுகக் குறிப்புகள் (1:1-4)
2. மூப்பர்களை ஏற்படுத்துதல் (1:5-16)
3. விசுவாசிகளுக்குப் போதித்தல் (2:1-3:8)
4. பிரிவினைகளையும், வாக்குவாதங்களையும் உண்டாக்குகிறவர்களிடம் நடந்து கொள்ளும் விதம் (3:9-11)
5. முடிவான அறிவுரைகள் (3:12-15).

தீத்து நிருபம் மிகச் சிறியதாக இருப்பினும், இது கிறிஸ்தவ ஊழியர்களுக்கான விலைமதிப்புள்ளக் கையேடு ஆகும். இதிலுள்ள ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் பற்றிய அறிவு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுவதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு சிறந்ததோர் அஸ்திபாரமாகும்.

சபையின் திட்டவட்டமான நிருவாக அமைப்பிலும், விசுவாசத்திலும் விசுவாசக் கூட்டத்தார் அடைந்த முன்னேற்றத்தை, 1 தீமோத்தேயு, தீத்து மற்றும் (பின்னால் கற்றுக்கொள்ளவிருக்கும்) 1பேதுரு ஆகிய நிருபங்கள் காட்டுகின்றன. முந்தைய நிருபங்களைக் காட்டிலும் இவற்றில், சபைத் தலைவர்கள் (கண்காணிகள், உதவிக்காரர்) பற்றியும், அவர்களது பொறுப்புகள் பற்றியும் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், தலைவர்களின் தகுதிகளும் விவரமாக வரையறுக்கப்பட்டுள்ளன.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

முன்னுரை

அ. வேதாகமத்தின் இந்த பாகம், தீத்துவுக்கு (கிரேத்தாத் தீவிலிருந்த சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த) உள்ளூர் சபையிலிருந்த பல வகையான மக்களுக்கு என்ன கற்றுத் தர வேண்டும் என்று கூறிய அறிவுரைகளின் ஒரு பாகமாக இருக்கிறது; வயது சென்ற ஆண்கள், வயது சென்ற பெண்கள், வாலிபப் பெண்கள், வாலிப ஆண்கள் மற்றும் அடிமைகள் (2:1-10)

(ஆ) இந்த அறிவுரைகள் கொடுக்கப்பட்டது ஏனென்றால், கள்ளப் போதகர்கள் (விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று கூறிய குழுவைச் சார்ந்தவர்கள்) சபைக்குள் வந்து, யூதர்களின் புராணக் கட்டுக்கதைகளையும், சுவிசேஷ சத்தியங்களைப் புறக்கனித்தவர்களுடைய (1:14) கட்டளை களையும் போதித்துக்கொண்டிருந்தார்கள் ஆவிக்குரிய தலைவர்கள் வயது சென்ற மற்றும் வாலிப மனிதர்களுக்கு என்ன கற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே, இன்றைய விவாதத்தின் பொருளாக இருக்கிறது.

1. வயது சென்ற ஆண்களுக்கு ஆவிக்குரிய தலைவர் கற்றுக்கொடுக்கவேண்டியவைகள்:- (தீத்து 2:1-2).

அ. வசனம் 1. "ஆரோக்கியமான உபதேசத்திற்குரியவைகளைப் பேசு" வயது சென்ற ஆண்களுக்கு, கிறிஸ்தவ வாழ்க்கையை எவ்வாறு வாழவேண்டும் என்று போதிக்கிற ஆவிக்குரிய தலைவனாகிய தீத்துவுக்கு இது கூறுப்படுகிறது. ஆரோக்கியமற்ற, (வியாதிப்பட்ட, மரணத்தை உண்டாக்கும் வைரஸ் என்ற விஷ கிருமியைப்போல) விருப்பங்கள் மற்றும் பண்பில்லாத ஆர்வங்கள், ஆவியவைகளைப் போன்ற கள்ளப் போதனைகளுக்கு அவனுடைய உபதேசங்கள் நேர் மாறாக இருக்கும். இந்தக் கள்ளப்போதகர்கள், (விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று கூறும் பிரிவினர்) விடாமல் முயன்று சிறிது சிறிதாக வழிகண்டுபிடித்து குடைந்து சபைக்குள் சென்றுவிடுவார்கள்.

ஆ. வசனம் 1 "ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவைகளை..." "ஆரோக்கியமான" என்ற சொல், "ஆரோக்கியமான உபதேசம்" என்ற சொல்தொடரில் மருந்து வகையைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது, அதாவது சுகமான தேக நிலை என்று பொருள்படும். ஆகவே சன்மார்க்கமான நல்ல நிலையிலான கொள்கைகளைப் (உபதேசங்களைப்) பேசவேண்டும் என்று பொருள்படும். ஒருவன் சன்மார்க்கமாகவும், ஆவிக்குரிய காரியங்களில் ஆரோக்கியமாகவும், நன்றாகவும் மாறத்தக்கதாக வழிநடத்தக் கூடியவைகளைப் போதிக்கவேண்டும். சன்மார்க்கமான காரியங்களிலும், ஆவிக்குரியவைகளிலும் கறைபடாத, புனிதமானவைகளையே உபதேசிக்கவேண்டும். ஒரு நபரை சன்மார்க்க ரீதியிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பாதுகாப்பாகவும், சுகமான நிலையிலும் வைக்கத்தக்கவைகளையே போதிக்க வேண்டும்.

இ. வசனம் 2. "முதிர்வயதுள்ள புருஷர்கள்..... புத்தி சொல்லு" "முதிர்வயதுள்ள புருஷர்கள்" என்பது, போதகர்கள் அல்லது மூப்பர்களைக் குறிப்பிடாது.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

விசுவாசிகள் அடங்கிய கூட்டத்திலுள்ள வயது முதிர்ந்தவர்கள் அதாவது, அநேகமாக அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள். "மூத்தவர்கள்" முதலாவது குறிப்பிடப்படுகின்றனர் ஏனெனில், அவர்கள், சன்மார்க்க நல் நடத்தைக்கு வாலிபர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒரு உதாரணமாகப் (மாதிரியாக) பயனுள்ளவர்களாக (அறிந்தோ அல்லது அறியாமலோ) இருந்திருக்கிறார்கள். வாலிபர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற "மற்றவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக" (தகப்பன்மார்கள் மற்றும் வீட்டிலுள்ள மற்ற நெருங்கிய உறவினர்கள் தவிற) மாறிவிடுகின்றனர்.

ஈ. விசுவாசிகள் கூட்டத்திலுள்ள வாலிபர்கள், சபைக்கு வெளியேயுள்ள மனிதர்களின் நடத்தையை பின்பற்றலாம் என்ற நோக்கம் ஒரு போதும் இருந்ததில்லை. (உம்.) விளையாட்டு வீரர்கள், திரைப்பட நட்சத்திரங்கள், பந்தய கார் ஓட்டிகள், தாலாட்டுப் பாட்டு பாடகர்கள், தொழிலதிபர்கள், மற்றும் ஐசுவரியமும், கீர்த்தியுமுடைய பெரியோர்கள், முதலியவர்கள். இது ஆசிரியர்கள், ஆலோசகர்கள், அல்லது பயிற்சியாளர்கள் முதலிய உள்ளூர் பள்ளி சார்ந்த ஒழுங்கு முறைக் கூடங்களில் பணியாற்றுபவர்களுக்கும் அவ்வாறே பொருந்தும். உள்ளூர் சபையில் அவர்கள் பின்பற்றத்தக்க மாதிரியாக இருப்பவர்கள் அவர்களுக்கு இருக்கவேண்டும். அவர்கள், உலகப் பிரகாரமானவர்களையல்ல, ஆவிக்குரிய மனிதர்களைப் பின்பற்றுவதே அவசியமாக இருக்கிறது.

உ. இக்காரணத்தினாலேயே, சபையிலுள்ள "மூத்தவர்களான" மனிதர்கள், நல்ல முன்மாதிரியான சன்மார்க்க நடத்தையை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். அது கீழ்க்கண்டவற்றில் எதுவாகவும் இருக்கலாம்.

1. சபையில் அவர்களுடைய சன்மார்க்க நடத்தை.

2. அல்லது, சமுதாயத்தில் அவர்கள் வாழும் வாழ்க்கை.

ஊ. வசனம் 2 "......தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க..." (முதிர் வயதுள்ள புருஷர்களுக்கு புத்தி சொல்லு) "தெளிந்த புத்தி" என்றால் மனதளவில் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது; உன்னுடைய கருத்துக்களை (மற்றவர்களைக் குறித்து மற்ற காரியங்களில்) பயன்படுத்துவதில் நிதானமாக இருத்தல். (உச்சக் கட்டத்திற்குச் செல்வதை தவிர்த்தல்) மற்றும் (இயற்கையான) உணர்ச்சிகளையும் மாம்ச இச்சைகளையும் வெளிப்படுத்துவதில் மிதமாக இருத்தல்-இதில், மதுபானம் குடித்தலைத் (அல்லது புளிப்பேறிய அல்லது போதை உண்டாக்கும் பானங்கள்) தவிர்த்து, தெளிந்த மனதைக் காத்துக்கொள்ளுதலும், உள்ளடங்கும்.

எ. கிரேத்தாத் தீவிலுள்ள விசுவாசிகளுக்கு, இந்த அறிவுரைகள் சிறப்பாக அதிக அவசியமானதாக இருந்தது. ஏனெனில் பொதுவாக அங்கு வாழ்ந்து வந்தவர்கள், (சபையிலுள்ள விசுவாசிகளில் பெரும்பாலானவர்கள்). சோம்பேறிகளும் பெருந்தீனிக்காரர்கள் (உணவு மற்றும் போதைதரும் பானங்கள்) என்றும் யாவராலும் அறியப்பட்டிருந்தார்கள் (தீத்து 1:12-13).

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

ஏ. வசனம் 2. "நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும், பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, "முதிர்வயதுள்ள புருஷர்களுக்கு புத்திசொல்லு," முதிர்வயதுள்ளவர்களுக்கும் (மூத்தவர்கள்) ஆவிக்குரிய தலைவர், கீழ்க்கண்ட காரியங்களைக் குறித்து புத்திசொல்ல வேண்டும்.

1. நல்லொழுக்கமுள்ளவர்களும் - தங்கள் சொந்த வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாயும், பெருந்தன்மையுடையவர்களுமாயிருப்பதில் உறுதியாய் நிற்க வேண்டும். ஜாக்கிரதையுள்ளவர்களாயும், மரியாதையையும் கனத்தையும் மற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளத்தக்கதாக, வாழ்க்கையில் திட்டவட்டமான நோக்கத்தையும், குறிக்கோள்களையுமுடையவர்களாக இருக்க வேண்டும்.

2. தெளிந்த புத்தியுள்ளவர்களும் - சிந்தனைகளிலும், நியாயஞ் செய்வதிலும், கிரியைகளை நடப்பிப்பதிலும், தங்களில் தானே, திறமையுடன் செய்வதில் தேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். உங்களுடைய உணர்ச்சிகளையும், மனதையும், கிரியைகளையும், கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்களாக இருக்கவேண்டும்.

3. ஆரோக்கியமுடையவர்களாக இருக்கவேண்டும் - (சன்மார்க்க ரீதியிலும், ஆவிக்குரிய காரியங்களிலும், நல்ல நிலையிலிருப்பவர்களாய் இருக்கவேண்டும்)

(அ) விசுவாசத்தில் - உன்னை இரட்சிப்பதற்கு, கிறிஸ்துவின் மீது இடைவிடாமல் சார்ந்திருப்பது, அறியப்பட்டதாக இருக்கவேண்டும். (அவர்களுடைய நடத்தை மற்றும் தைரியமுடன் கொடுக்கும் அவர்களுடைய சாட்சியின் மூலமாகவும்)

(ஆ) அன்பு -மற்றவர்களிடம் உண்மையான நேசத்தையும், கரிசனையையும் காட்டவேண்டும்; மற்றவர்களுக்கு தரும் கிரியைகளைச் செய்ய தம் மனதை சாய்க்கிறவர்களாயிருக்கவேண்டும். (மனிதர்கள், இது சம்பந்தமாக உதவி, சிறப்பாகத் தேவையுடையவர்களாயிருக்கின்றனர் ஏனெனில் அவர்கள் மற்றவர்களுடைய தேவையை உணர்ந்துகொள்ளுவதில் குறைந்த உணர்வுடையவர்களாயிருக்கின்றனர்)

(இ) பொறுமையிலும் -வாழ்க்கையிலும், பிசாசை எதிர்த்து நிற்பதிலும், அநேக பரீட்சைகளையும் சோதனைகளைச் சந்திப்பதில் நீடிய பொறுமையை வெளிப்படுத்தவேண்டும்.

2. வாலிப ஆண்கள், வயதில் முதிர்ந்தவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று ஆவிக்குரிய தலைவர் போதிக்கவேண்டும் (1பேதுரு 5:5).

அ. "இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்...." "கீழ்ப்படியுங்கள்" என்றால், நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதை அறிந்து, உங்களுக்குக் கூறப்பட்டவைகளை, செய்வது, என்று பொருள்படும். சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள், சபையிலுள்ள அவர்களைவிட வயது முதிர்ந்த மற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் செய்யும்படி கூறும் காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

ஆ. இந்தச் சட்டத்திற்கு விதிவிலக்குகள் இருக்கின்றன. சபையிலுள்ள போதகர்கள் மற்றும் வயது முதிர்ந்த அங்கத்தினர்களின் அறிவுரைகள், துன்மார்க்கத்திற்கும் தேவன் மற்றும் அவருடைய வார்த்தைக்கு எதிராகக் கலகம்செய்ய வழிநடத்தக் காரணமாக இருக்குமானால், அவர்களுடைய அறிவுரைகளுக்கு ஒருபோதும் கீழ்ப்படியக் கூடாது. ஆகிலும், சொல்லப்பட்ட இந்த அறிவுரைகள், பேதுரு இந்த நிருபத்தை எழுதிய காலத்தில், கர்த்தரைச் சேவித்து வந்ததாக அவர் நம்பின வயது சென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ மனிதர்களுக்காகக் கூறப்பட்டவைகள்! சபையிலுள்ள வித்தியாசமான பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்காகப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் பெரும்பாலான அறிவுரைகளுக்கு, இது உண்மையாகப் பொருந்தும்.

3. வாலிப ஆண்கள் தாழ்மையினால் தங்களை உடுத்துவித்துக் கொள்ளவேண்டும் என்று, ஆவிக்குரிய தலைவர் போதிக்கவேண்டும். (1பேதுரு 5:5-7).

அ. வசனம்5 "...ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்துமனத்தாழ்மையை, அணிந்துகொள்ளுங்கள்", "அணிந்துகொள்ளுங்கள்" என்றால், ஒரு முடிச்சினால் கட்டுவது, என்று இங்கு பொருள்படும். ஒரு வஸ்திரத்தை மற்ற வஸ்திரங்களுக்குமேல் கட்டுவது (முடிந்து கட்டுவது) ஆதி திருச்சபையின் காலத்தில் அடிமைகள் வேலை செய்துகொண்டிருக்கும் போது அழுக்காகாமல் இருக்க அணியும் மேலங்கி அல்லது மேல் ஆடையை விவரிக்க இது பயன்பட்டது.

ஆ. "மனத்தாழ்மையை" என்றால், நீ சமுதாய நிலையில், கீர்த்தியில், தற் புகழ்ச்சியில், மற்றும் தன்னைச் சார்ந்திருப்பதிலும், குறைவாக இருப்பதை உன்னுடைய இருதயத்தில் அறிந்திருக்கிறாய் என்று பொருள்படும். ஆகவே, ஒரு அடிமை எவ்வாறு ஒரு மேல் ஆடையை அவனுடைய இடுப்பைச் சுற்றிக்கட்டிக்கொள்வதுபோல, வாலிபர்கள் அவர்களுடைய தாழ்மையான நிலையைப்பற்றிய அறிவைக் கட்டிக்கொள்ளவேண்டும்.

இ. ஆகவே வாலிபர்கள் கீழ்க்கண்டவாறும் இருக்கவேண்டும்.

1. சபையிலுள்ள போதகருக்கும், மற்ற வயதுசென்ற அங்கத்தினர்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

2. அவர்கள் மனத்தாழ்மையையும் அணிந்துகொள்ள வேண்டும். சபையிலுள்ள வாலிபர்கள், மற்றவர்களைக் குறித்து, ஒரு உண்மையான தன்னலமற்ற கரிசனையை உடையவர்களாயிருப்பதற்கு பேதுரு வாலிபர்களை அழைக்கிறார். இதற்கு, இயேசு, அப்போஸ்தலர்களுடைய பாதங்களைக் கழுவினது. ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறது (யோவான் 13:4-5,15).

ஈ. இதற்கு இரண்டு நல்ல காரணங்கள் இருக்கிறது.

1. தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து (தடைசெய்கிறார், விரோதமாகப் போர் செய்கிறார்) முடிவில் காயத்தையும் வேதனையையும் எப்போதும் கொண்டுவருகிற, அவர்களுடைய சுய தீர்மான வழிகளுக்கு, அவர்களை விட்டுவிடுகிறார்.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

2. ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை தருகிறார் (ஆவிக்குரிய நன்மைகள் மற்றும் சலுகைகள்) கீழே, நீதிமொழிகள் 3:34 வசனத்தை மேற்கோளாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது: "இகழ்வோரை அவர் இகழுகிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்". யாக்கோபும் நமக்கு இவ்வாறு கூறுகிறார். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்". (யாக்கோபு 4:10).

உ. வசனம் 6. "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்". "அவருடைய பலத்த கை". என்ற சொற்தொடர் பழைய ஏற்பாட்டில் சாதாரணமாக காணப்படுகிறது. எகிப்து தேசத்திலிருந்து தேவன், அவருடைய மக்களை எவ்வாறு விடுவித்தார் என்பதை விவரிப்பதற்கு, இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. (யாத்திராகமம் 13:9; உபாகமம் 9:26). நாம் அவருக்கு முன்பாக நம்மை நாமே தாழ்த்தி, அவருடைய தலைமையையும், வழிநடத்துதலையும் ஏற்றுக்கொண்டால் அவருடைய பராக்கிரமத்தினாலும், வல்லமையான கிரியைகளினாலும். நமக்கு உதவிசெய்து நம்மை விடுவிப்பார் என்பதே இதன் கருத்து.

ஊ. வசனம் 7. "உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்", "வைத்து விடுங்கள்" என்றால், "அதன்மேல் எறிவது" எருசலேமிற்கு இயேசு சவாரிசெய்த கழுதைக்குட்டியின் மீது, சீடர்கள் அவர்களுடைய வஸ்திரங்களை எறிந்ததுபோல், (லூக்கா 19:35).

நம்முடைய "கவலைகள்" நம்முடைய விசாரங்கள் மற்றும் நமது சம்பந்தப்பட்ட கரிசனைகள். சங்கீதக்காரன், "கர்த்தர்மேல் உன்பாரத்தை வைத்துவிடு," என்று கூறுகிறார்.

எ. சமூக நிலையில் உயர்ந்திருப்பது, புகழ் சுய மேன்மை, தன்னை சார்ந்திருப்பது ஆகிய இவைகளே, மிக முக்கியமான காரியம் என்று, இன்று உலகத்தால் நம்முடைய சபையிலுள்ள வாலிபர்களுக்குக் கூறப்படுகிறது. "ஆகவே, பேதுருவுடைய இந்த உபதேசம், அன்று ஆதிச்சபைகளில் உள்ள வாலிபர்களுக்கு எவ்வாறு பொருத்தமானதாக இருந்ததோ அவ்வாறே, இன்றும், சபையிலுள்ள வாலிபர்களுக்கு இருக்கிறது. இது உலகம் அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நேர் மாறானதாக இருக்கத்தக்கதாக அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்யவேண்டும்.

1. சபையிலுள்ள வயதுசென்ற மற்றவர்களுக்கும் போதகர்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

2. தாழ்மையை அணிந்துகொள்ளவேண்டும்.

3. தேவனுடைய பலத்த கையின் கீழ் அடங்கியிருக்கவேண்டும்.

4. அவர்களுடைய எல்லா கவலைகளையும், விசாரங்களையும் அவர் மீது வைத்துவிடவேண்டும். ஆவியில் அவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும், நன்றாக விழித்திருக்கிறவர்களாயிருந்து பிசாசை எதிர்த்து நிற்கவேண்டும், என்ற நம்முடைய அடுத்த குறிப்பை, நாம் பார்க்கப்போகிறோம்.

4. வாலிப ஆண்கள், தன்னடக்கம் உள்ளவர்களும், விழிப்புள்ளவர்களுமாயிருக்கவேண்டும் என்று ஆவிக்குரிய தலைவர் போதிக்கவேண்டும். (1பேதுரு 5:8-10).

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

வசனம் 9. "...உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே". கிறிஸ்துவுக்காக, அவர்களுடைய உபத்திரவங்களிலே, வாலிப ஆண்களும், பெண்களும் தனித்திருக்கவில்லை. கிறிஸ்துவுக்குள் தேவபயமுள்ள வாழ்க்கை வாழ விரும்புகிற ஒவ்வொருவரும் துன்பப்படுவார்கள் (2தீமோத்தேயு 3:12) கிறிஸ்து முதலாவதாக உபத்திரவப்பட்டிருக்கிறார். அதன்பின் அப்போஸ்தலர்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும். இப்பொழுது போதகர்களும், மற்றும் கிறிஸ்துவுக்குள் மற்ற எல்லா விசுவாசிகளும், இதில் அடங்குவார்கள்.

ஆ. ஆகவே, பெருமையாகவும், கலகம் செய்கிறவர்களாகவும் இருந்து, போதகர்களுக்கும் மற்றும் சபையிலுள்ள மற்ற வயது சென்ற அங்கத்தினர்களுக்கும் தொல்லை கொடுக்கிறவர்களாக இருக்கக் கூடாது. பிசாசு நாம் யாவரையும் அழிக்க முயற்சிக்கிறான்.

இ. வசனம் 8. "...உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்". சபையிலுள்ள வாலிபர்களுக்குத் தொல்லைகளுக்குக் காரணமாயிருப்பது போதகர்கள் அல்லது வயது முதிர்ந்த அங்கத்தினர்கள் அல்ல. உங்கள் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணமாயிருப்பது பிசாசாக இருக்கிறான். யோபுவை, பிசாசு அழிக்க முயற்சித்தபோது, அவனிடம் இவ்வாறு கேட்கப்பட்டது.

"நீ எங்கேயிருந்து வருகிறாய் "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன்" என்று பிசாசு பதிலளித்தான். (யோபு 1:6-7).

அவன் இன்னமும் எவனை விழுங்கலாமோ என்று பூமியைச் சுற்றித் திரிகிறான்.

1. விசேஷமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றும் வாலிப ஆண்கள் (மற்றும் பெண்கள்).

2. சிறப்பாக அவர்களுடைய இயற்கை பிறவி உணர்ச்சிகள், இச்சைகள் மற்றும் பெருமை மற்றும் எதிர்த்து நிற்கும் தன்மைகள் மூலமாக.

ஈ. வசனம் 8. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் விழித்திருங்கள்...." தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், எல்லாக் காரியங்களையும் தெளிவாக காண்பார்கள். ஆகவே, அவன் "விழித்திருக்கிறான்".. அவன் துன்மார்க்கம் மற்றும் ஆவியில் நன்றாக விழித்திருக்கிறான்" என்று இது பொருள்படும். இது தூங்கி விழுவதற்கு நேர்மாறானது. நம்முடைய வாலிபர்களை பிசாசு அழிக்க விரும்புவதினால், இந்தக் கடினமான நாட்களில் அவர்கள், இந்த மனப்பான்மையை ஆயுதமாகத் தரித்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது."

உ. பாலிய புருஷர்கள், "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று, உபதேசிக்கவேண்டுமென்று தீத்துவுக்கும், தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் பவுல் கூறுகிறார். (தீத்து 2:6,12).

அந்த நிருபத்தில், "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என்றால், நிதானமாக இருக்க பயிற்சிசெய்யவேண்டும், சிந்தனைகளிலும், கிரியைகளிலும் தன்னடக்கத்துடன் இருக்கவேண்டும்

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

சுபாவமான தீவிர உணர்ச்சிகளையும், பிறவி குணங்களையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவேண்டும், என்று பொருள்படும். நம்முடைய வாலிபர்கள், அவர்களுடைய இயற்கையான தீவிர உணர்ச்சிகள், மற்றும் பிறவிக்குணங்களின், தூண்டுதல்களை நிறைவேற்றுவது தொடர்பாக, "மிகுந்த விழிப்புடன்" இருக்கவேண்டும்.

ஊ. வசனம் 9. விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு (பிசாசுக்கு) எதிர்த்து நில்லுங்கள். "எதிர்த்து" என்றால், விரோதமாக இருப்பது, எதிராக நிற்பது, என்று பொருள்படும்.

1. "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்கோபு 4:7) என்று யாக்கோபு கூறும்போது, இதே கருத்தை வெளிப்படுத்துகிறார்.

2. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 6:11,13) என்று பவுல் கூறும்போதும் இக்கருத்தையே சொல்லுகிறார்.

3. பிசாசினுடைய, பரீட்சைகளையும், சோதனைகளையும், நீங்கள் எதிர்த்து நிற்கும்போது இக்கருத்தை உங்கள் இருதயத்தில் நன்றாக உணர்ந்து செயல்படுவது மேலானதாக இருக்கும் என்று அனுபவத்திலிருந்து நான் உங்களுக்கு கூறுகிறேன்.

நாம் தீர்மானத்துடன் பேசும்போது, அவர் அறிவார். அவ்வாறே நாம் ஏனோதானோ என்று உதட்டளவில் ஆராதிக்கும் போது, அதுவும் அவருக்குத் தெரியும்.

எ. வசனம் 10. "....தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி...... நிலைநிறுத்துவாராக". "சீர்படுத்தி" என்ற சொல், வலைகளைப் பழுது பார்ப்பது அல்லது உடைந்த எலும்புகளை பழைய நிலையில் நிலை நிறுத்துவது ஆகியவகைகளைக் குறிப்பிட சாதாரணமாகப் பயன்படுத்தப்படும். பரீட்சைகளிலிருந்தும் சோதனைகளிலிருந்தும், மற்றும் மன உணர்ச்சிகளிலும் சரீரபிரகாரமான வேதனைகளிலிருந்தும் விடுதலை கிடைக்கும் நம்முடைய நாள் பெரும்பாலும் இங்கேயே இருக்கிறது. கிறிஸ்து சீக்கிரம் வருகிறார். எல்லாக் காரியங்களுக்கும் முடிவு சமீபமாக இருக்கிறது. அவர் வரும்போது யாவற்றையும் சீர்படுத்துவார், நம்முடைய உடைந்த எல்லா எலும்புகளையும்;

1. அநீதியான வேதனைகளையும் உபத்திரவங்களையும்!

2. பரீட்சைகள், தொல்லைகள் மற்றும் உபத்திரவங்களையும்!

3. ஆவிக்குரிய காயங்கள், கண்ணீர் மற்றும் மனம் உடைந்துபோன நிலை!

அல்லேலூயா!!

முடிவுரை

அ. தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தும் ஆவிக்குரிய தலைவர், சபையிலுள்ள எல்லா வயதுப் பிரிவினர்களாலும் பின்பற்றவேண்டிய ஆரோக்கியமான சன்மார்க்க நடத்தையைப் பற்றி உபதேசிக்கவேண்டும்.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ ஆண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:1-2,6)

வயது சென்ற ஆண்களும், பெண்களும் கூட, சபையிலும் வீட்டிலும், சமுதாயத்திலும் அவர்கள் வெளிப்படுத்தும் வாழ்க்கை மாதிரி மற்றும் உதாரணங்கள் மூலமாக சபையிலுள்ள இளைஞர்களுக்குஉபதேசிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

ஆ. நம்முடைய வாலிப மக்கள், சன்மார்க்க நடத்தை தொடர்பாக உலகம் போதிப்பதை பின்பற்றுவது அல்லது அதில் வசிப்பவர்களுடைய நடத்தையைப் பின்பற்றுவது, ஆகியவைகளைத் தவிர்க்க வேண்டும். இப்படி செய்வார்களானால் அவர்கள் உலகத்தார்களைப் போலாகி தேவனுடைய சத்துருக்களாகிவிடுவார்கள்.

இ. கீழ்க்கண்டவற்றிற்காக நான் தேவனைத் துதிக்கிறேன்:

1. நம்முடைய சன்மார்க்க வழிகாட்டியாகப் பயன்படும் அவருடைய வார்த்தை.

2. நாம் யாவரையும் எப்போதும் நீதியில் நடத்தும் பரிசுத்த ஆவியானவருக்காக நன்றி கூறுகிறேன்.

3. நம்முடைய வாலிப ஆண்கள் மற்றும் பெண்களால் பின்பற்றக் கூடிய வாழ்க்கை நடத்தும் சபையிலுள்ள மூத்த ஆண்கள் மற்றும் பெண்களுக்காக நன்றி கூறுகிறேன்.

4. கிறிஸ்துவாகிய நம்முடைய கர்த்தருடைய குணநலப்பண்புகளை அதிகமதிகமாக அவர்களுடைய வாழ்க்கையில் பிரதிபலித்துக் காட்டி வாழும் வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

முன்னுரை

அ. வேதாகமத்தின் இந்த பாகம், தீத்துவுக்கு (கிரேத்தாவிலுள்ள சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்தவன். உள்ளூர் சபையிலுள்ள பல்வேறு பிரிவினர்களுக்கு என்ன உபதேசிக்க வேண்டுமென்று கூறிய அறிவுரைகளின் ஒரு பாகமாக இருக்கிறது: வயது சென்ற ஆண்கள், வயது சென்ற பெண்கள், வாலிப பெண்கள், வாலி ப ஆண்கள் மற்றும் அடிமைகள்.

ஆ. கள்ளப் போதகர்கள் (விருத்தசேதனம் பற்றிக் கூறும் பிரிவினர்) சபைக்குள் வந்து, யூத புராணக் கதைகள் மற்றும் சுவிசேஷ சத்தியங்களையும் புறக்கணிப்பவர்களின் (1:14) கட்டளைகளை உபதேசித்ததின் காரணமாக இந்த அறிவுரைகள் கொடுக்கப்பட்டது. அவர்கள் எந்த நற்கிரியைகளையும் செய்யக் கூடாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இ. "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு" , என்று பவுல், தீத்துவிடம் வசனம் 1, கூறுகிறார். "ஆரோக்கியமான உபதேசம்" என்பது சன்மார்க்கக் காரியங்களில் தவறில்லாத போதகத்தைக் குறிக்கிறது. சபைக்குள் நுழைந்துவிட்ட, தவறான வாஞ்சைகள் மற்றும் ஆரோக்கியமற்ற விருப்பங்கள் மற்றும் கள்ளப் போதகர்களின் உபதேசங்களுக்கு, நேர்மாறானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறது.

ஈ. ஆகவே, பிள்ளைகளுக்கும், வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வயது சென்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் மற்றும் அடிமைகளுக்கும் பொருத்தமானதாக இருந்து, சன்மார்க்க ரீதியில் ஆரோக்கியமான நடத்தைக்கு வழிநடத்தக் கூடியவைகளை உபதேசிக்க வேண்டும் என்று தீத்துவுக்குக் கூறப்பட்டது. வயது சென்ற மற்றும் வாலிப பெண்களுக்கு மட்டும் இன்று நமது விவாதத்தை வைத்துக் கொள்ளுவோம்.

1. ஆவிக்குரிய தலைவர், வயது சென்ற பெண்களுக்கு, உபதேசிக்க வேண்டியவைகள் (தீத்து 2:3)

அ. "அப்படியே" நேர்மையான நடத்தை எவ்வாறு வயது சென்ற ஆண்களுக்கு அவசியமோ அவ்வாறாகவே வயது சென்ற பெண்களுக்கும் அது அவசியம். சபையிலுள்ள ஆண்களுக்கு சன்மார்க்க ரீதியில் உபதேசிக்கப்பட்ட ஆரோக்கியமான போதனைகளை இது குறிக்கும் (வசனம் 2) எவ்வாறு, சன்மார்க்கத்தில் ஆரோக்கியமான நடத்தை பற்றி வயது சென்ற ஆண்களுக்கு உபதேசிக்கப்பட்டதோ அவ்வாறே வயதுசென்ற பெண்களுக்கும் உபதேசிக்கப்படவேண்டும்.

ஆ. "முதிர்வயதுள்ள ஸ்திரீகளும்...பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்க...." உபதேசிக்க வேண்டும். "முதிர் வயதுள்ள ஸ்திரீகள்" அநேகமாக 60 வயதுக்கு மேலானவர்களாக இருந்திருக்க வேண்டும். "பரிசுத்தத்துக்கேற்ற" என்றால் தேவாலயத்தில் ஊழியம் செய்யும் ஆசாரியனுக்கு ஏற்ற மாதிரியான நடத்தை; பரிசுத்தமும், புனிதமுமான நடத்தைப் பண்புகளுடன் கூடிய ஆளுமையை உடையவர்களாக இருத்தல், என்று பொருள்படும்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

அவர்களுடைய வயது முதிர்ந்த காலத்தில் பெண்கள் கோபமடைகிறவர்களாகவும், கலகம் செய்பவர்களாகவும், எதிர்த்து நிற்பவர்களாகவும் இருப்பார்கள் என்றும் சாதாரணமாக சப்தங்களை உண்டாக்குபவர்களாக இருப்பார்கள் என்றும் கூறப்படுவது இங்கு நினைவு கூறப்படுகிறது.

இ. நாங்கள் அமெரிக்காவில் ஊழியம் செய்து கொண்டுவந்த அநேக சபைகளில், இவ்விதமான நடத்தையுடையவர்களை முதிர்வயதுடைய பெண்கள் மத்தியில் (மற்றும் ஆண்கள் மத்தியிலும்) கண்டிருக்கிறோம். மற்ற வெளிநாடுகளில் இந்த அளவிற்கு அதிகமாக இல்லை. இவர்கள், குடும்பத்திலுள்ள இளம் பெண்களுக்கு, அவர்கள் இருக்க வேண்டியபடி, முன்மாதிரிகளாகவும், போதிக்கிறவர்களாகவும், திட்டமாக இருக்க முடியாது!

ஈ. "... அவதூறுபண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும்..." "அவதூறுபண்ணுகிறவர்கள்", என்றால் துன்மார்க்க மானதும், மற்றவர்களை தாழ்மைப்படுத்துவதற்கும், வேதனைப் படுத்துவதற்கும், தீங்கிழைப்பதற்கும் ஏதுவான அடிப்படையற்றக் குற்றச்சாட்டுகளைக் கூறும் பிசாசுபோல நடந்துகொள்ளுகிறவர்கள். இது குரோதமும் பொறாமையும் நிறைந்த வம்புப் பேச்சு. திராட்சரசம் மற்றும் போதை உண்டாக்கும் பானங்களுக்கு அடிமையாகும் துர்பழக்கம் ஆதி கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தது. இந்தக் காலத்தில் அமெரிக்காவில் சபைக்கு வெளியே இருப்பவர்களால், இவர்கள் (குடிபோதையில் இருப்பவர்கள்)

பாராட்டப்படுவதுபோல, முதலாம் நூற்றாண்டு கலாச்சாரப்படி மிதமிஞ்சிக் குடிப்பவர்கள், உண்மையில் பாராட்டப்பட்டார்கள். போதைப் பானங்களுக்கு அடிமையாயிருப்பதற்கும் வீண் வம்பு பேச்சுகள் பேசுவதற்கும் தொடர்பு இருக்கிறதென்றும் பலர் கூறுகிறார்.

உ. "...நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும்..." இது முதிர்வயதுள்ள பெண்கள், வீட்டிலுள்ள வாலிபப் பெண்களுக்கு உபதேசிப்பதைக் குறிக்கும். வயதில் முதிர்ந்த பெண்கள், வீட்டிலுள்ள இளம் பெண்களுக்குப் போதிக்கிறவர்களாயிருக்க வேண்டுமானால், அவர்கள், தேவாலயத்தில் சேவிக்கிற ஒரு ஆசாரியனைப் போல நடந்து கொள்ள வேண்டும்; ஆவியில் முதிர்ந்த நிலையைப் பிரதிபலிக்கும் மாதிரியில் நடக்க வேண்டும்; நேர்மையான மற்றும் உற்சாகத்தை மூட்டும் வகையில் வாழவேண்டும்.

ஊ. "நற்காரியங்களை" அவர்கள் போதிக்க வேண்டும். சன்மார்க்கமாக ஆரோக்கியமானதும், நேர்மையானதும், பெருந்தன்மையுள்ளதும், கவர்ச்சிகரமானதும் (அழகானதும்) ஆன காரியங்களைப் போதனை மற்றும் முன்மாதிரி ஆகிய இரண்டின் மூலமாகவும், அவர்கள் உபதேசிக்க வேண்டும் என்று இது பொருள்படும்.

எ. ஆரோக்கியமான கிறிஸ்தவ கருத்துக்களும், சன்மார்க்க நல் நடத்தையும், குடும்பத்தில், முதிர்வயதுள்ள பெண்கள் மூலமாக அடுத்த சந்ததிக்குக் கடத்திச் செல்லப்பட வேண்டும்! பள்ளிக்கூடம், ஒரு உலகப்பிரகாரமான ஆலோசகர், ஒரு அரசாங்கப் பிரதிநிதி, பொழுது போக்கு இலாக்காவைச் சார்ந்தவர்கள், நெருக்கடி நிலையில் பாதுகாப்பு அளிக்கும் மையம், வைத்தியர்கள் அல்லது போதகராயிருந்தாலும், இது அவர்களுடைய பொறுப்பு அல்ல.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

2. வயதுமுதிர்ந்த பெண்கள், வாலிபப் பெண்களுக்கு உபதேசிக்க வேண்டியவைகள் (தீத்து 2:4-5)

அ. வசனம் 4. "...பாலிய ஸ்திரீகள்...போதிக்கிறவர்களுமாயிருக்கவும்..." "பாலிய ஸ்திரீகள்" என்றால், "மனைவிகள் அல்லது திருமணமான குமாரத்திகள் மற்றும் பேத்திகள்" ஆகியவர்களைக் குறிக்கும். குடும்பத்திலுள்ள வாலிபப் பெண்களைப் பயிற்றுவிப்பது, வயது முதிர்ந்த பெண்களின் வேலையாக இருக்கிறது. இதுவே, சபையின் அடிப்படையான மற்றும் அஸ்திபாரமானதுமான உபதேசமாக இருக்கிறது! அமெரிக்காவில் தேவன் நமக்கு உதவி செய்ய வேண்டும். நாம் நம்முடைய வழியை தவற விட்டுவிட்டோம். திசைகாட்டியில்லாத வேட்டைக்காரனைப் போல வனாந்தரத்தில் நோக்கமின்றி சென்று கொண்டிருக்கிறோம்.

ஆ. "போதிக்கிறவர்களாயிருக்கவும்" என்றால், இந்த வாலிபப் பெண்களைத் தெளிந்த புத்தியுள்ளவர்களாக்குவது; அவர்களுக்கு ஆலோசனை கொடுப்பது; ஆரோக்கியமான சன்மார்க்க நடத்தைக்கு அவர்களை ஊக்குவிப்பது; மனைவிகளாக அவர்களுடைய பொறுப்பை உணரத்தக்க "ஞானமுள்ளவர்களாகும்படி தூண்டுவது" என்று இங்கே பொருள்படும்.

இ. வசனம் 4. "... தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்..." அவர்களிடம் பாசமுள்ளவர்களாயிருக்கவேண்டும்; அவர்கள்பால் நேசமுள்ளவர்களாயிருப்பதைக் காட்ட வேண்டும்; என்று இது பொருள்படும். இது ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்தின் மையமாக இருக்க வேண்டும். வயது முதிர்ந்த பெண்கள், தாங்கள், தங்கள் வாழ்க்கையில் இந்த மாதிரியாக நடந்து கொள்ளாதிருப்பார்களானால், கணவனிடமும், பிள்ளைகளிடமும் அன்பும், பக்தியும் காட்டுகிறவர்களாயிருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுவது அல்லது புத்தி சொல்வது என்பது சாத்தியமான காரியமல்ல.

ஈ. வசனம் 5. "...தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும்...", "தெளிந்தபுத்தியுள்ளவர்களும்" என்றால், தீவிரமானவைகளைத் தவிர்ப்பது, இயற்கைப் பண்புகளையும் பற்றுகளையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது என்பதைக் குறிக்கும். வாலிபப் பெண்கள், அடக்கம், கட்டுப்பாடு, மற்றும் சமநிலையான வாழ்க்கை வாழ கற்றுக்கொடுக்கப்படவேண்டும். "கற்புள்ளவர்களும்" என்பது, அவளுடைய பாலியல் வாழ்க்கை, இருதயம் மற்றும் மனதில் தூய்மையாக இருப்பதை வெளிப்படுத்தவேண்டும்.

உ. "...வீட்டில் தரித்திருக்கிறவர்களும் நல்லவர்களும்...." "வீட்டில் தரித்திருக்கிறவர்களும்" என்றால், குடும்பத்தில் பெண்கள் கவனிக்கவேண்டிய அநேகக் காரியங்கள் மற்றும் குழந்தைகளை வளர்ப்பது, (குடும்பப் பொறுப்பாளியாக) முதலிய இளமையான மனைவிகள் விருப்பத்துடன் நிறைவேற்றவேண்டிய காரியங்களைக் குறிக்கும். இதற்கு தன் அன்பை தியாகம் செய்வது அவசியமானதாக இருக்கிறது. அத்துடன் எரிச்சலடைவது, கடினமாகவும் அன்பற்றவிதமாகவும் நடந்து கொள்ளுமாறு சோதிக்கப்பட ஏதுவாகிறது. ஆகவே குடும்பத்தில் பலவேலைகளில் ஈடுபட்டு சுறு சுறுப்பாக இருப்பதுடன் அன்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

ஊ. வசனம் 5. "....தங்கள், புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி,......" இது இளமையான மனைவிகள், குடும்பத்திற்குக் கிறிஸ்தவ கணவனே தலைமைப்பதவியில் இருக்கவேண்டும் என்பதை தாமாகவே மனம் உவந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதைக் குறிக்கிறது. (எபேசியர் 5:22-24). "கீழ்ப்படிகிறவர்களாய்" என்றால், கீழ்ப்பட்டவர்களாய், சொற்படி செய்கிறவர்களாய், அடங்கி நடப்பவர்களாய் இருக்கவேண்டும் என்று பொருள்படும்.

எ. வசனம் 4. "தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு ....." குடும்பத்திலுள்ள வயதுசென்ற பெண்களின் முன்மாதிரியான நடத்தை மற்றும் உபதேசங்களின் மூலமாக வாலிபப் பெண்கள் கற்றுக்கொள்ளவேண்டிய ஏழு காரியங்களை இது குறிப்பிடுகிறது. வாலிப கிறிஸ்தவ மனைவிகளின் மீது, தெய்வீக நீதி நெறிகள் உரிமையுடன் சுமத்தப்படுகிறது. அவர்கள் இந்தத் தவிர்க்கமுடியாத சன்மார்க்கக்

குடும்ப விதிகளை அசட்டை செய்வார்களானால், சுவிசேஷம் குற்றஞ்சாட்டப்படும் மற்றும் மதிப்பற்றதாகக் கருதப்பட்டு, அவர்களைக் கவனித்து வருபவர்களால் (சிநேகிதர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தாரால்) புறக்கணிக்கப்படும்.

3. அவிசுவாசியான கணவன்மார்களையுடைய பெண்களுக்கு, ஆவிக்குரிய தலைவர் போதிக்கவேண்டியவைகள் (1பேதுரு 3:1-6).

அ. விசுவாசிகளைப் பற்றி பேதுருவுடைய போதனைகளில் இது ஒரு பாகம் 1. ஆளுகை செய்யும் அதிகாரிகளுக்கு 2. எஜமான்களுக்கு மற்றும். 3. விசுவாசிகளான மனைவிகள் அவிசுவாசியான கணவன்மார்களுக்கு (1பேதுரு 2:13-3:7) இன்று உலகத்திலுள்ள அநேக தேசங்களிலுள்ள சபைகளில், அவிசுவாசியான கணவன்மார்கள், விசுவாசிகளாயிருக்கும் மனைவிகளுக்கு அபாயகரமான சிக்கலாக இருக்கிறார்கள்.

ஆ. வசனம் 1. "அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்...." விசுவாசிகள், ஆளுகைசெய்யும் அதிகாரிகளுக்கும், அடிமைகள் எஜமான்களுக்கும், எவ்வாறு கீழ்ப்படிகிறார்களோ, அவ்வாறே கிறிஸ்தவ மனைவிகள், அவிசுவாசிகளான அவர்களுடைய கணவன்மார்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். (எபேசியர் 5:22-24) அவர்களுடைய சன்மார்க்க மனச்சாட்சியை மீறும்படியாக அவர்களுக்குக் கூறப்பட்டாலொழிய மற்றபடி, அவர்கள் செய்யும்படியாகச் சொல்லப்பட்டவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

இ. வசனம் 1-2,4 "அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடுகூடிய, உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து....ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். "விசுவாசிகளான மனைவிகள், எப்போதும் குற்றம் காணுவதினாலும், விவாதத்தினாலும், போதிப்பதினாலும், அவர்களுடைய அவிசுவாசிகளான துணைவர்களை அவர்கள் பக்கமாக ஆதாயம் செய்யமுடியாது. கீழ்க்கண்டவைகள் மிக சக்திவாய்ந்த சுவிசேஷ ஆயுதங்களாக இருக்கிறது.

1. அவர்களுடைய துணைவர்களுக்குக் கீழ்ப்படிதல்.

2. குடும்பத்தில் தேவ பக்தியான வாழ்க்கை நடை, சுத்தமான, தூய மற்றும் குற்றஞ்சாட்டப்படாத நடத்தை.

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

3. சாந்தமான (மென்மையான, தாழ்மையான) மற்றும் அமைதலான (உன் இடத்தை மட்டும் காத்துக்கொள்ள, இடையூறு உண்டாக்காதே) அழகிய கவர்ச்சிகரமான ஆவி. குடும்பத்தில் அவள் அநீதியாகத் துன்புறுத்தப்படுவாளேயாகில் இம்மாதிரியான வாழ்க்கை நடை கடினமானதாக இருக்கும். ஆகிலும், அவள் சகித்துக்கொள்ளுவாளேயாகில், அவளுடைய கணவனைக் கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்து, குடும்பத்தில் சமாதானத்தைக் கொண்டு வரும்படியான நல்ல தருணம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது!.

ஈ. வசனம் 3. "...புறம்பான அலங்கரிப்பு, உங்களுக்கு அலங்காரமாயிராமல்...." மிக விரிவான தலை அலங்காரம், முத்துக்கள் அல்லது விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட சீப்புகள், தங்கத்தினாலான தலைமுடிச்சுகள், நாடாக்கள் மற்றும் மிக உயர்ந்த மற்றும் விலையேறப்பட்ட நகைகள் மற்றும் ஆடைகள் ஆகியவைகள், நாகரீக மிக்க அலங்காரப்பொருட்களாக ரோமப் பெண்களால் கருதப்பட்டது. அவிசுவாசிகளான கணவன்மார்களையுடைய மனைவிகளுக்கு அறிவுரைகள் கூறும்போது, இவைகள் எல்லாவற்றையும், பேதுரு தம்முடைய மனதில் வைத்திருந்தார். அவர்களுடைய அவிசுவாசிகளானகணவன்மார்கள், கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்ய, இவ்வகையான அழகு, ஏற்ற கருவியாக பயன்படமுடியாது.

உ. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும்.. தங்களை அலங்கரித்தார்கள்" அவர்களுடைய அவிசுவாசிகளான கணவன்மார்களோடு எவ்விதமாகத் தொடர்புகொள்ளவேண்டாம் என்பதை அறிவுறுத்த, பேதுரு சாராளை முன் மாதிரியாகப் பயன்படுத்துகிறார். ஆபிரகாமை "ஆண்டவன்" என்று அழைக்கும் அளவுக்கு, அவள் அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தாள். (ஆதியாகமம் 18:12) அவள், அவளுடைய கணவனுக்கு மிகுந்த மரியாதை கொடுத்தாள் என்று இது காட்டுகிறது. அதிகாரத்தில் அவன் மிகவும் உயர்ந்தவன் என்பதை அவள் அறிந்திருந்தாள். குடும்ப காரியங்கள் சம்பந்தமாக அதிகாரத்தில் இருக்கும் ஒருவன்.

ஊ. வசனம் 6. "......நீங்கள் நன்மைசெய்து, ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால், அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" அவர்களுடைய கணவன்மார்களுடன் உள்ள தொடர்பில், சாராளைப்போலாகும்போது, கிறிஸ்தவப் பெண்கள், சாராளுடைய குமாரத்திகளாகின்றனர். இதுவே அவர்கள் செய்யவேண்டிய சரியான காரியம்

எ. "பயப்படாதிருந்தீர்களானால்" என்றால், அவிசுவாசியான கணவனோடு வாழுவதின் விளைவினால், ஏற்படக்கூடிய மறைமுகமான தொல்லைகளின் காரணமாக விசுவாசத்தில் அசைக்கப்படவோ, பயத்திற்கு இடம்கொடுக்கவோ, அதிர்ச்சியடையவோ கூடாது என்று இது பொருள்படும் (நீதிமொழிகள் 3:25-26).

ஏ. ஒரு விசுவாசியான பெண், அவளுடைய திருமண வாழ்க்கையில், அநீதியான அழிவுகளையும், மறைமுகமாகத் துன்பங்களையும் அனுபவிப்பது தொடர்பாக, மேலும் அதிகமான செய்திகளை அப்போஸ்தலனாகிய பவுல் கொடுக்கிறார் (1கொரிந்தியர் 7:14-16) கவனிக்கவேண்டிய நான்கு கருத்துக்கள் இருப்பதாக அவர் கூறுகிறார்:

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

1. வசனம் 15 "...... சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" புறஜாதியான் முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் என்று தீர்மானித்த திருமணத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்வது, ஏமாற்றப்படுவதற்கும், தீவிர கருத்துவேறுபாடுகளுக்கும் மற்றும் பலவருட சரீர துஷ்பிரயோகத்துக்குக் கூட வழிநடத்தும். இம்மாதிரியான சூழ்நிலையில், ஒரு வழிநடத்தும் கொள்கை, "குடும்பத்தில் சமாதானம்" என்பதாக இருக்கிறது.

2. வசனம் 16. கிறிஸ்தவனாக மாறிய துணைவியுடன் வாழ்க்கை நடத்த ஒரு அவிசுவாசி ஆயத்தமாயிருந்தால், ஒரு சமயம்", "மனைவியானவளே நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ, உனக்கு எப்படித் தெரியும்" ஒரு கலப்புத் திருமணத்தில் மறைமுகமாக சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கம் இருக்கிறது. அவிசுவாசியுடன் வாழ்க்கை நடத்தும் ஒருவரால் மட்டுமே இதைக் குறித்து சரியான தீர்ப்புக் கூறமுடியும்! மற்றும் இந்த சூழ்நிலை காலத்திற்குக் காலம் மாறக் கூடும்!.

3. வசனம் 14. "...அவிசுவாசியான புருஷன்/ மனைவி, தன் விசுவாசியான துணையினால் பரிசுத்தமாக்கப்படுகிறான்...." "பரிசுத்தமாக்கப்படுகிறான்"என்றால்புனிதமாக்கப்படு கிறான்,சுத்திகரிக்கப்படுகிறான்,அர்ப்பணிக்கப்பட்டு, கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவனாகிறான். விசுவாசியான துணைவர் "பரிசுத்தமாயிருந்தால்" அவிசுவாசியான துணையும் அப்படியே "பரிசுத்தமாகிறான்" அதாவது, சிறப்பான முறையில் பிரித்தெடுக்கப்பட்டு,அந்நிலையில் நம்பிக்கையோடு அவர்களுடைய இரட்சிப்புக்கு வழி நடத்தும்.

4. வசனம் 14 "......உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே (பெற்றோரில் ஒருவர் கிறிஸ்தவர்களாயிராவிட்டால்) இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன." குடும்பத்தில் பெற்றோரில் ஒருவர் கிறிஸ்தவராக இருந்தால், அவிசுவாசியான துணைவர் பரிசுத்தமாகக் கருதப்படுவதுபோல, குடும்பத்தின் ஒரு பாகமாகக் கருதப்படும் பிள்ளைகளும் அவ்வாறே பரிசுத்தமாகக் கருதப்படுவார்கள். அவர்களும் நம்பிக்கையோடு அவர்களுடைய இரட்சிப்புக்கு வழிநடத்தப்படும்படியாக சிறப்பான முறையில் பிரித்தெடுக்கப்பட்டவர்களா யிருப்பார்கள்.

ஓ. தற்கால உலக சமுதாயத்தில், ஒரு அவிசுவாசியான துணைவரோடு ஒரு விசுவாசி வாழ்க்கை நடத்த நினைப்பார்களானால், அவர்கள் கீழ்க்கண்ட அநேகக் காரியங்களைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1. சபையின் ஒரு பாகமாக நான் இருந்து அதனுடைய ஊழியத்திலும் இந்த உலகத்தில் பங்கெடுக்கும்படியாக என்னை அனுமதித்து என்னுடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்த, என்னுடைய அவிசுவாசியான துணைவர் திருப்தி அடைவாரா?

2. என்னுடைய அவிசுவாசியான துணைவரை கிறிஸ்து அண்டை வழிநடத்துவது எனக்கு சாத்தியமாகுமா? அல்லது அவன்/ அவளுடன் வாழ்க்கை நடத்துவதால் நான் சபையிலிருந்து விழுந்து விடுவேனா?

3. என்னுடைய நடத்தையில் ஏற்பட்ட மாறுதல் தீவிர மன உளைச்சலையும், சண்டையையும் உண்டாக்குமா?

4. என்னுடைய பிள்ளைகள் மற்றும் அவர்களைக் குறித்து என்னுடைய புதிய எதிர்பார்ப்புகள் ஆகிய இவைகளைக் குறித்த காரியம் என்ன?

வயதுசென்ற மற்றும் வாலிப கிறிஸ்தவ பெண்களுக்குரிய போதனைகள் (தீத்து 2:3-5)

5. அவன்/அவள் தொடர்ந்து என்னுடன் வாழ்க்கை நடத்த விரும்பாவிட்டால் நான் என்ன செய்யவேண்டும்? பிரிக்கப்பட மற்றும் மணமுறிவு தொடர்பான "அரசாங்க சட்டங்கள்" யாவை?

முடிவுரை

அ. குடும்பத்தில் வயதுசென்ற மற்றும் வாலிப பெண்களுடைய நடத்தைக்கும், சிநேகிதர்கள், இனத்தார் மற்றும் அயலகத்தார்களால் சுவிசேஷம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் இடையே தொடர்புகாணப்படுகிறது. இது, குடும்பத்தில் வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கும் பொருந்தும்.

ஆ. ஆகவே, குடும்பத்திலுள்ள வயதுசென்ற கிறிஸ்தவப் பெண்கள் (நீங்கள் தூர இடத்தில் வாழ்ந்து வந்தாலும்) இந்த உபதேசங்களை ஏற்றுக்கொண்டு அது கூறுவதுபோல் செய்வீர்களானால் நலமாயிருக்கும். வாலிப கிறிஸ்தவ பெண்கள் (மனைவிகள்), வயதுசென்ற கிறிஸ்தவப் பெண்களின் உபதேசங்களை ஏற்றுக்கொள்வதும் நன்மை தருவதாயிருக்கும். அவிசுவாசிகளான கணவன்மார்களையுடைய மனைவிகள், எல்லாம் சாத்தியமானதாக இருக்குமானால், துணைவருக்காகவும், பிள்ளைகளுக்காகவும் அவர்களுடைய கணவன்மார்களுடன் வாழவேண்டும்.

இ. உலகத்தாலும், நம்முடைய தற்கால கலாச்சாரத்தின்படியும் இம்மாதிரியான வாழ்க்கை, நடைமுறையில் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால், கிறிஸ்தவ பெண்களுக்கு, கர்த்தர் நிமித்தம் இது பின்பற்றப்படவேண்டும்! ஆனால் உன்னுடைய நன்மைக்காகவும் என்று நாம் அவ்வாறே சேர்த்துக்கொள்ளலாம்.

விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை உபதேசிக்கும் காரியங்கள் (தீத்து 2:11-14)

முன்னுரை

அ. இரண்டாம் அதிகாரத்தில், சபையிலுள்ள பலவிதமான பிரிவினர்களுக்கு என்ன உபதேசிக்க வேண்டும் என்பதைப் பற்றிய கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பவுல், தீத்துவுக்குக் கொடுக்கிறார்.

1. வயதான மனிதர்கள் சாந்தமுள்ளவர்களும், மரியாதைக்குரியவர்களுமாயிருக்கவேண்டும்.

2. வயதான பெண்கள், அவர்கள் வாழ்க்கையில் பயபக்திக்குரியவர்களாயிருக்க வேண்டும்.

3. வாலிபர்கள் தன்னடக்கம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று உபதேசிக்கவேண்டும்.

4. அடிமையானவர்கள், அவர்களுடைய எஜமான்களுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்பட்டிருக்கவேண்டும் என்று போதிக்கவேண்டும்.

ஆ. அதன் பிறகு, தேவனுடைய கிருபையைக் குறித்தும், நிர்பந்தமான பாவிகள் மீது அவருடைய அளவுக்கெட்டாத தயவைப்பற்றியும் பவுல் பேசுகிறார். கிறிஸ்துவெளிப்பட்டு, தேவனுடைய இரட்சிப்பின் கிருபை எல்லா மனிதர்களுக்கும் கிடைக்கும்படி செய்தார்.

1. தேவ பயமற்ற காரியங்களுக்கும், உலகபற்றுகளுக்கும் "வேண்டாம்" என்று மறுத்துவிடுகிறது.

2. தன் அடக்கம், நீதி மற்றும் தேவபக்தியான வாழ்க்கை வாழ உதவிசெய்கிறது.

3. மகிமையின் நம்பிக்கைக்காகக் காத்திருக்க உன்னதமான தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக.

1. தேவ பயமற்ற காரியங்களுக்கும் உலகப்பற்றுகளுக்கும் "வேண்டாம்" என்று மறுத்துக்கூற தேவனுடைய கிருபை நமக்குப் போதிக்கிறது. (2:11-12).

அ. வசனம் 11. "தேவனுடைய கிருபை" இது தகுதியற்றவர்களிடம் காட்டப்படும் தேவனுடைய அன்பும், தயவும், கிறிஸ்துவின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. இது ஏற்ற நேரத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டது.

1. நாம் சன்மார்க்கக் காரியங்களில் பலனற்றவர்களாயிருக்கும்போது.

2. இன்னமும் பாவிகளாயிருக்கும்போது

3. நாம், தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கும்போது, (அவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும்போது) (ரோமர் 5:6-10).

இதற்கு நாம் தகுதியுடையவர்கள் அல்ல, அல்லது நாம் சம்பாதித்துப் பெற்றுக்கொண்டதும் இல்லை.

2. வசனம் 11. "இரட்சிப்பை அளிக்கத்தக்க" தேவனுடைய கிருபை இரட்சிக்கிறது. அதாவது தேவ கோபாக்கினையிலிருந்து நம்மைக் காப்பாற்றி நம்மைப் பாதுகாக்கிறது என்று இது பொருள்படும். இச்சொல், தேவனுடைய கிருபை நமக்கு,

விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை உபதேசிக்கும் காரியங்கள் (தீத்து 2:11-14)

தேவனுடைய சட்டமன்றத்தில் ஆதரவாக இருந்து, நம்முடைய காவலராகக் காத்துக்கொள்ளுகிறது. நம்முடைய பாவங்களினிமித்தம் நாம் ஒருபோதும் இனிமேல் குற்றவாளிகள் அல்ல என்று இது விவாதிக்கிறது. அவைகளைக் கிறிஸ்து அவரோடு கல்வாரிக்கு எடுத்துச் சென்று விட்டார். அவர் தேவையான கிரயத்தை அதாவது நம்முடைய தண்டனையை அனுபவித்துவிட்டார். ஆகவே நாம் "குற்றமற்றவர்கள்" என்று அறிவிக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட வேண்டும்.

ஈ. வசனம் 13. "நமக்குப் போதிக்கிறது" "தேவனுடைய கிருபை" என்ற சொல்லை பவல் உருவகப்படுத்துகிறார். அது இரட்சிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டவர்களை, ஆதரிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குப் போதிக்கிறது. அப்போஸ்தலன் கூறுவது என்னவென்றால், "இப்பொழுது தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டோம். நாம், அதனுடன் இணைந்த சன்மார்க்க வாழ்க்கையில் ஜீவிக்கவேண்டும்".

உ. "போதித்து" என்றால், போதிக்கப்படுவது, ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்வது என்பதைவிட மிக மேலானது என்று பொருள்படும். ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதைப்போல, அறிவுறுத்தப்படுவது, உற்சாகப்படுத்தப்படுவது, திருத்தப்படுவது, நல்ல பழக்கத்திற்குள் கொண்டுவருவது, என்று பொருள்படும்.

ஊ. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் வேலையை, இது குறிப்பிடுகிறது. (2கொரிந்தியர் 3:18).

தேவனுடைய கிருபையை நாம் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை நடையை அதிகம் அதிகமாய் பிரதிபலிக்கும் சன்மார்க்க வாழ்க்கை நடையில் வாழ, அவர் நமக்குப் போதிக்க ஆரம்பிக்கிறார். சில வேளைகளில் அவர்,

1. அறிவுறுத்துகிறார்.

2. ஊக்கப்படுத்துகிறார்.

3. திருத்தி, ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கிறார்.

எ. ஆகிலும், இவையாவும் நம்முடைய நன்மைக்காகவே இருக்கிறது. நமக்குள், சமாதானம், நீதி, மற்றும் பரிசுத்தம் உண்டாகும்படிக்கு அவர் முயற்சி செய்கிறார். (எபிரெயர் 12:10-11). இதில் பெரும்பாலும், ஆவிக்குரிய தலைவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கம்செய்யும்போதும், போதிக்கும்போதும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நடைபெறுகிறது. (எபேசியர் 4:11; 2தீமோத்தேயு 3:16; எபிரெயர் 4:12).

ஏ. வசனம் 12. "நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து...." தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில், பரிசுத்த ஆவியானவர் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் "வெறுக்க" (ஒழித்துவிட நாமாகவே மறுத்துவிட) நமக்குப் போதிக்கத் துவங்குகிறார்.

1. அவபக்தி என்பது, தேவனும் கிறிஸ்துவும் இல்லாமல் இருக்கிற, இந்த உலகத்திலுள்ள மக்கள் செய்கிற துன்மார்க்கமான மற்றும் பொல்லாத காரியங்களைக் குறிக்கிறது.

2. கிறிஸ்தவர்களுக்குத் தவிர்க்கப்பட்ட விருப்பங்கள், வாஞ்சைகள்; பற்றுகள் மற்றும் இந்த உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை முதலியவைகளே, லௌகீக இச்சைகள் எனப்படும். (தீத்து 3:3).

விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை உபதேசிக்கும் காரியங்கள் (தீத்து 2:11-14)

ஒ. ஒரு சன்மார்க்கப் பயிற்சி திட்டத்தின் மத்தியில் நாம் இருக்கிறோம். ஆகவே "நம்முடைய சன்மார்க்கப் பயிற்சி திட்டத்தின் வழியாக நாம் எவ்வாறு சென்று கொண்டிருக்கிறோம்?" என்பது கேள்வியாக இருக்கிறது. நமக்கு மேலும் பயிற்சி அவசியமாக இருக்கிறது என்று சொல்லக் கூடிய சில பாகங்கள் இன்னமும் நம்முடைய வாழ்க்கையில் இருக்கின்றனவா? இன்னும் அதிக கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டியவைகள்? நாம் சென்றுகொண்டிருக்கும் பாதையின் மத்தியில் வழியில் திருத்தப்படவேண்டியவைகள்?

2. தன்னடக்கம், நீதி, மற்றும் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ, தேவனுடைய கிருபை நமக்குப் போதிக்கிறது (2:12)

அ. "...தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய்.... ஜீவனம்பண்ணி....நமக்குப் போதிக்கிறது".

1. "தெளிந்த புத்தியுள்ளவர்களாய்" வாழும் வாழ்க்கை என்றால், பரிசுத்த ஆவியானவரால் நமக்குள் உருவாக்கப்பட்ட ஆரோக்கியமான (சன்மார்க்கத்தில், பாதுகாப்பான) மனதினால் நம் வாழ்க்கையிலுள்ள இச்சைகளை அடக்கிஆளுவது என்று பொருள்படும் (ரோமர் 12:2).

2. "நீதியுள்ள" வாழ்க்கை வாழுவது என்றால், மற்றவர்களோடுள்ள நம்முடைய தொடர்புகளில் நேர்மையும், நீதியுமான காரியங்களை நாம் செய்வது.

3. "தேவ பக்தியுள்ள" வாழ்க்கை வாழுவது என்றால், நம்மை தேவனுக்கு அர்ப்பணித்து, அவரை பிரியப்படுத்தும் வாழ்க்கை வாழுவது என்று பொருள்படும். நமக்கு நீதியும் பரிசுத்தமுமுள்ள தன்மை இருக்கிறது. நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றின் மீது நமக்கு விருப்பம் இருக்கிறது.

ஆ. அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு இவ்வாறு கூறுகிறார்.

1. நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து..." (1பேதுரு 1:13).

2. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1பேதுரு 4:7).

3. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கொர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்". (1பேதுரு 5:8).

நீதிமொழிகள் நமக்கு இவ்வாறு கூறுகிறது:

1. "நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது." (நீதிமொழிகள் 3:32).

2. "செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" (நீதிமொழிகள் 15:8).

3. "அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்...." (நீதிமொழிகள் 2:7).

விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை உபதேசிக்கும் காரியங்கள் (தீத்து 2:11-14)

3. மகிமையின் நம்பிக்கைக்காக நாம் காத்திருக்க, தேவனுடைய கிருபை நமக்குப் போதிக்கிறது. நம்முடைய தேவனும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகை (2:13).

அ. "எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி," இது சாதாரணமாக எதிர்பார்த்துக்கொண்டிருப்பதற்கும் மேலானது; ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பது, எந்த நிமிடத்திலும் எதிர்பார்ப்பது, உன்னால் முடிந்தவரை விழிகளைத் தட்டாமல் அவருடைய வருகைக்காகப் பார்த்துக்கொண்டிருப்பது.

ஆ. "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்"இந்தச் சொற்தொடர், இந்த வேத வசனத்தில் நமக்காக சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. அவர் வாக்குத்தத்தம் செய்தபடி வானத்தில் இயேசு தோன்றுவார் என்றும், மகிமைப்பட்ட சரீரத்தை நமக்குத் தருவார் என்றும், பரலோகப் பரதீசில் அவரோடு இருக்க நம்மை எடுத்துக்கொள்ளுவார் என்பதும் நம்முடைய நம்பிக்கையாக இருக்கிறது. (மத்தேயு 25:31,34).

இ. இது எப்பொழுது, எவ்வாறு நடைபெறப்போகிறது என்பதைக் குறித்து நாம் அறியாமல் இருக்கக் கூடாது என்று, அப்போஸ்தலனாகிய பவுல், வேறு வேத வசனங்களில், இக்காரியத்தைப் பற்றிய காரியங்களை, விரிவாக விவரித்து நமக்குக் கொடுத்திருக்கிறார்.

1. கிறிஸ்து தோன்றும்போது நடைபெறும் காரியங்கள் (1தெசலோனிக்கேயர் 4:13-17 ;1கொரிந்தியர் 15:48-49, 51-52).

2. அவர் தோன்றுவதற்கு முன் நடைபெறப்போகும் காரியங்கள். (2தெசலோனிக்கேயர் 2:3-7).

ஈ. "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்" என்பது, நாம் இன்னமும் பெற்றுக்கொள்ளாத ஒரு காரியம். நாம் சுவீகார புத்திரராக எடுத்துக்கொள்ளப்படுவோம் என்றும், நம்முடைய சரீரங்கள் மீட்கப்படும் என்றும் நாம் நம்புகிறோம். நாம் இரட்சிக்கப்படும்போது இந்த நம்பிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த மகிமையின் நம்பிக்கை உண்மையாவதற்குக் காத்திருக்கும்போது, நாம் நமக்குள் புலம்புகிறோம். (ரோமர் 8:23-25) இந்த வெளிப்படையான இயற்கை உலகமும் அவ்வாறே இருக்கிறது.

உ. "மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்" அவர் தோன்றும்போது, வெளிப்படும் கிறிஸ்துவின் மகிமையை இது குறிப்பிடுகிறது. (யோவான் 17:24; பிலிப்பியர் 2:6) அவருடைய முதல் வருகையின்போது, அது உலகத்தால் கண்டு அறியப்படாமலும், ஒரு பொருட்டாகக் கருதப்படாமலும் இருந்தது. (யோவான் 1:10-11,14) ஆனால், அவருடைய இரண்டாம் வருகை அறியப்படாமல் இருக்க முடியாது.

ஊ. "மகாதேவனும் நம்முடைய இரட்சகருமாகிய" நம்முடைய "மகாதேவனும் இரட்சகரும்"என்று இந்த வேத வசனத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு இயேசு கூறப்படுகிறார். அவர், நம்முடைய இரட்சகர் என்பதற்கும் மேலானவர், அவர் தேவனாகவும் இருக்கிறார். அவர் கடவுள், தேவனுக்குச் சமமானவர், அவருடைய எல்லா குணநலப் பண்புகளுடனும், வானத்திலும், பூமியின்மீதும் வல்லமையும் அதிகாரமுடைய குமாரனாகிய தேவனாக இருக்கிறார் (மத்தேயு 28:18).

விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை உபதேசிக்கும் காரியங்கள் (தீத்து 2:11-14)

எ. தேவன் தன்மையில் (சாரம், பொருள்-உபாகமம் 6:4; 4:35) ஒருவராக இருக்கிறார். இருந்தபோதிலும், தேவனுடைய தன்மையில் (சாரம், பொருள்) திரித்துவம் இருக்கிறது. மூன்று தனிப்பட்ட நபர்கள்; பிதா, குமாரன்,மற்றும் பரிசுத்த ஆவியானவர். (மத்தேயு 3:16-17; யோவான் 14:16-17; 1கொரிந்தியர் 12:4-6).

ஏ. நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மிக உன்னதமான தன்மையை ஒருமுறை நாம் அறிந்துகொண்டோமானால், நாம் உற்சாகமடைவோம். அவர் திரும்ப வருவார் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவும், நமக்கு மகிமையான சரீரங்களைக் கொடுக்கவும், பரலோகத்தில் நித்திய காலம் எல்லாம் நம்மை அவர் அருகில் வைத்துக்கொள்ளவும் வல்லவராயிருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

ஓ. பிலிப்பியர்களுக்கு எழுதின அவருடைய நிருபத்தில், பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலிப்பியர் 3:21).

முடிவுரை

அ. கீழ்க்கண்ட காரியங்களை நாம் செய்யக்கூடியவர்களாக இருக்க அவர் விரும்புவதற்கு, கர்த்தர் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார்.

1. அவபக்திக்கும் உலக இச்சைகளுக்கும் "வேண்டாம்" என்று மறுத்துக் கூற.

2. தன்னடக்கம், நேர்மை மற்றும் தேவ பக்திபுள்ள வாழ்க்கை வாழ.

3. நம்முடைய மகிமையின் நம்பிக்கைக்காக காத்திருக்க-நம்முடைய மகா தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து மகிமையாக தோன்றுவதற்காகக் காத்திருக்க.

ஆ. நமக்காகத் தம்மைத் தாமே அவர் கொடுத்தார். எல்லா அக்கிரமங்களிலிருந்தும் நம்மைஅவர் மீட்டார். அவருடைய சொந்த மக்களாக அவருக்கு இருக்கவேண்டும் என்ற காரணத்திற்காக, அவர் நம்மை சுத்திகரித்தார்-நன்மையானதைச் செய்ய வாஞ்சிக்கும் மக்கள் (தீத்து 2:14).

இ. ஆகவே, அவருடைய வருகைக்காக நாம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், நம்முடைய வாழ்க்கையில், பரிசுத்த ஆவியானவர் அவருடைய பரிசுத்தமாக்கும் வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். "நம்முடைய வாழ்க்கைகளில் அந்த வேலை எவ்வாறு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது?". அவரை எதிர்த்து நிற்காதே, உன்னுடைய நித்திய முடிவு அதைச் சார்ந்துள்ளது.

நற்கிரியைகளைச் செய்தல்
(தீத்து 3:1-2, 9-11)

முன்னுரை

அ. இன்றைய தினத்திற்குரிய வேதபாகத்தில், கீழ்க்கண்டவர்களோடு தொடர்புகொள்ளும்போது, இதற்கு முன் அவர்களுக்குப் போதிக்கப்பட்டபடியே கிரேத்தா தீவிலுள்ள (1:5; 2:15; 3:12-13). விசுவாசிகள் நடந்துகொள்ளவேண்டுமென்று ஞாபகப்படுத்தும்படி, பவுல் தீத்துவிடம் வற்புறுத்திக் கூறுகிறார்.

1. புறம்பேயுள்ளவர்கள் (வசனம் 1-2)

2. கள்ளப்போதகர்கள் (வசனம் 9-11).

1. கிறிஸ்தவர்கள் ஆளுகை செய்கிறவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கீழ்ப்படியும்போது நன்மை செய்கிறார்கள். (3:1).

அ. "துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும், கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும்...அவர்களுக்கு நினைப்பூட்டு" அவர் சொல்லப்போகும் காரியங்களை விசுவாசிகளுக்கு "நினைப்பூட்டும்படியாகத்" தீத்துவிடம் கூறுவதிலிருந்து கிரேத்தாவிலுள்ளவர்கள் இக்காரியங்களைப்பற்றி மற்ற சந்தர்ப்பங்களில் போதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று காட்டுகிறது. இது பவுல் ரோமாபுரியில் அவருடைய முதல் சிறையிருப்பிலிருந்து (வீட்டுக்காவலில்) விடுவிக்கப்பட்டபோது அநேகமாக நடந்திருக்கும். அப்பொழுது அவரும் தீத்துவும் அந்தத் தீவுக்குச் சென்று, அங்கே சபைகளை உண்டாக்கினார்கள் (1:5).

ஆ. "கீழ்ப்படிந்து" என்றால், அடங்கியிருத்தல், சொற்படி செய்தல் என்று பொருள்படும். "துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும்,இவர்கள் கிராமங்கள், நகரங்கள், மாகாணங்கள் (மாநிலங்கள்) மற்றும் ஒரு தேசம் முழுவதுமாக அரசாங்கப் பதவிகளிலிருந்து ஆளுகைசெய்யும், சமுதாய அதிகாரிகளாக இருப்பவர்கள்-இவர்கள், கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெறும்படியாகத் தேவனால், நியமிக்கப்பட்ட சமுதாய அதிகாரிகளாயிருக்கிறார்கள்

1.எல்லா ஜனங்களுடையபொதுவான நன்மைக்காக, காவலர்,பாதுகாப்புமற்றும்சுதந்திரமாக இடம்விட்டுஇடம்செல்லஉதவிசெய்கிறார்கள்.

2. தேவபக்தியுடனும் பரிசுத்தத்துடனும், சமாதானமாகவும் அமைதலுடனும் விசுவாசிகள் வாழ்க்கை நடத்த உதவுகிறார்கள் (ரோமர் 13:1,4; 1தீமோத்தேயு 2:2).

இ. "அடங்கியிருக்கவும்" சமுதாய அதிகாரிகள் கட்டளைகளுக்கு இசைந்து நடத்தல், அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்று அதின்படிசெய்தல்,அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல், என்று இது பொருள்படும்.

ஈ. "சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய..." "சகலவிதமான நற்கிரியைகள்" என்றால் மற்றவர்களுக்கு நற்பண்பைக் காட்டுவதற்கு ஏதுவான நன்மையான காரியம் எதுவாக இருந்தாலும் என்று பொருள்படும். "இவைகளே நன்மையும்மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்," என்று 3:8 வசனத்தில் பவுல் கூறுகிறார். இவைகள்விலையேறப்பட்டவைகளும்சன்மார்க்கமாக பரிசுத்தமுள்ளவைகளுமாய், வெளித்தோற்றத்திலும், பயனிலும், இருக்கிறது என்று பொருள்படும்.

உ. இதன் முக்கியமான கருத்து என்னவென்றால், நன்மை உண்டாக்குகிறவைகள், மதிப்பிற்குரியவைகள் மற்றும் சன்மார்க்கமாகப் பரிசுத்தமான காரியங்களையே விசுவாசிகள், புறம்பேயிருப்பவர்களோடு(சிறப்பாக ஆளுகைசெய்யும் அதிகாரிகள்) தொடர்புகொள்ளும்போது செய்யவேண்டும்.

நற்கிரியைகளைச் செய்தல்
(தீத்து 3:1-2, 9-11)

1. சமுதாயத்தில் நல்லபெயரைக் காத்துக்கொள்ள வேண்டும்.

2. நம்பிக்கையோடு சிலரை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்யவேண்டும். (1தீமோத்தேயு 2:2-4).

இந்த வாக்கியத்தின் முழுப்பொருள், நம்முடைய அடுத்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. கிறிஸ்தவர்கள் எல்லா மனிதர்களிடமும் தயவுள்ளவர்களாகவும் தாழ்மையாகவும் இருக்கும்போது நன்மைசெய்கிறார்கள் (3:2).

அ. "ஒருவனையும் தூஷியாமலும்" என்றால், மற்றவர்களுடைய நற்பெயருக்குப் பங்கம் ஏற்படும்படி பேசுவது, மற்றவர்களுக்கு எதிராகக் கோப வார்த்தைகளைக் கொட்டி திட்டுவது, அல்லது சபிப்பது, வெகுண்டு கேவலமாக வசைச் சொற்களைக் கூறுவது, அவமானப்படுத்தும் கடுஞ்சொற்களை வீசுவது, என்று பொருள்படும். (1பேதுரு 2:23).

ஆ. "சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக்காண்பிக்கவும்..." "சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும்," என்றால். எதிர்த்து நிற்காமல், சண்டையிடவும், போராட்டங்கள் செய்வதிலும் கலந்து கொள்ள மறுத்துவிடுவது. தாக்குகிறவனாக அல்லது கொடூரமுள்ளவனாக இல்லாமல் இருப்பது, என்று பொருள்படும்.

இ. பொருத்தமான காரியங்களைச் செய்வது, சாந்தமாக, பொறுமையாக மற்றும் தீவிரமில்லாமல் இருப்பது, புறம்பேயிருப்பவர்களிடம் (எல்லா மனிதர்களிடமும்) முடிந்தமட்டும் மிகுந்த தாழ்மையுடன்நடந்துகொள்வதுஎன்று பொருள்படும்.

ஈ. சன்மார்க்கமாக தாறுமாறான நடத்தையும் அநேக சமயங்களில் நம்மிடம் பகையுணர்வுடன் நடந்துகொள்ளும் புறம்பேயிருப்பவர்களிடம்,இம்மாதிரியான நடத்தை நம்மிடம் எதிர்பார்க்கப்படும்போதுதான். உண்மையான கிறிஸ்தவ நடத்தை, அதனுடைய முடிவான சோதனைக்குள் வைக்கப்படுகிறது.

3. கிறிஸ்தவர்கள் புத்தியீனமான தர்க்கங்களையும்,வம்சவரலாறுகளையும்தவிக்கும்போதுநன்மைசெய்கிறார்கள்.(3:9-11).

அ. வசனம் 9 "புத்தியீனமான தர்க்கங்களையும் வம்சவரலாறுகளையும் விட்டுவிலகு..." எச்சரித்துக் கூறும் இந்தப் பாடப்பொருள் இப்பொழுது, மதிபற்ற கிரியைகளில் எப்பொழுதும் ஈடுபடும் கள்ளப்போதகர்கள் பக்கமாகத் திரும்புகிறது. இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் இந்தப் பிரச்சனையைக் குறித்து முதல் முறையாகக் கூறப்பட்டது. (1:10-16; மற்றும் 1தீமோத்தேயு1:3-7 வசனங்களில் இதே மாதிரியான பிரச்சனை எபேசுவில் இருந்ததைக் காணலாம்).

ஆ. "விட்டுவிலகு" என்றால், அதிலிருந்து தூரதள்ளியிரு, ஒதுங்கிபோய்விடு, பிரிந்து தள்ளிநில், மற்றும் அதில் பங்குகொள்ளாதே, என்று பொருள்படும் "புத்தியீனமான தர்க்கங்கள்" என்றால், முட்டாள்தனமானதும், அபத்தமானதுமான மத சம்பந்தமான விவாதங்கள் மற்றும் சில மனிதர்கள் கொண்டுவரும் சர்ச்சைக்குரிய கருத்துப்பொருள் மீது கேள்விகளை எழுப்பி, அதற்குரிய விடைகளை ஆராய்வது.

நற்கிரியைகளைச் செய்தல் (தீத்து 3:1-2, 9-11)

இ. வசனம் 9. "...சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும்....." கள்ளப்போதகர்கள், (அநேகமாக இரட்சிக்கப்பட்டவர்கள் இப்பொழுது வழிவிலகியவர்கள் யூதர்கள்) கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கையில் வேறு சில தேவையான காரியங்கள் அவசியமாக இருக்கிறதென்று வெளிப்படையாக அறிவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இழிவான ஆதாயத்திற்காக இக்காரியங்களைப் போதித்துக்கொண்டிருந்தார்கள். (1:10,14) "சண்டைகளையும்....வாக்குவாதங்களையும், என்பது, கருத்துகள், அடிப்படையில் ஒருவருக்கொருவர் "வேறுபாடுடன்" இருப்பது விளைவாக எழும் வாய்ச்சண்டை, தாக்கங்கள் மற்றும் சச்சரவுகள்.

ஈ. வசனம் 9. "அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்" புத்தியீனமானதர்க்கங்களையும்,வம்சவரலாறுகளையும்மற்றும்சண்டைகளையும் நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும், விட்டு விலகுவதற்குரிய காரணம் இங்கு இருக்கிறது. அவைகளில் ஆதாயம் இல்லை மற்றும் பயனற்றது. அவைகள் சன்மார்க்கமாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது மற்றும் அதில் ஆவிக்குரிய எந்தவிதமான நன்மையும் இல்லை.

உ. வசனம் 10. "வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு, அவனை விட்டு விலகு", இது கள்ளப்போதகர்களைக் குறிப்பிடுகிறது. "புத்திசொன்னபின்பு" என்றால் அவனுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும், கடிந்துகொள்வது அல்லது எச்சரிக்கைசெய்வது என்று பொருள்படும்.

அந்த நபர், அவனுடைய பிரிவினை உண்டாக்கும் வழிகளை மாற்றிக்கொள்ளாவிட்டால் (பிரிவினைகளை உண்டாக்குவது மற்றும் சுயநலத்திற்காகக் கலகம் செய்து வேற்றுமை உண்டாக்குவது மற்றும் மாறுபட்ட சமயக்கொள்கைகளைப் பரப்புவது) சபை மற்றும் அதனுடைய அங்கத்தினர்கள், விசேஷமாக அதன் தலைவர் ஆகிய இவர்கள் அவனுடன் எந்தவிதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. (தவிர்க்க வேண்டும், புறக்கணிக்கவேண்டும், அழைப்புக்கு மறுப்பு தெரிவிக்கவேண்டும், ஐக்கியம் கொள்ள அல்லது கூட்டங்களில் பங்கெடுப்பதை தவிர்க்க காரணங்கள் கூறி விலகிவிடவேண்டும் ரோமர் 16:17-20).

ஊ. வசனம் 11. "அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னில் தானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்ப் பாவஞ் செய்கிறவனென்று அறிந்திருக்கிறாய்". சபை மற்றும் விசுவாசிகளைப் பொருத்தவரை, இந்த நபர் கீழ்க்கண்டவாறு இருக்கிறான்.

1. "நிலை தவறி" இருக்கிறான்-முற்றிலும் மாறிவிட்டான், சுவிசேஷம் மற்றும் வேதவசனங்களின் சத்தியத்திலிருந்து திரும்பிவிட்டான், சத்தியத்தோடு தொடர்பு அற்றவனாகிவிட்டான்.

2."பாவம்"செய்தவனாயிருக்கிறான்---தேவனுடைய சன்மார்க்கக் கற்பனைகளின் குறிக்கோளை தவறவிட்டுவிட்டான், குற்றவாளியாயிருக்கிறான், எனவே ஈவாகிய நித்திய ஜீவனில் பங்குபெற முடியாது.

3. "தன்னைத்தானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்" இருக்கிறான்---- அவனுடைய பாவம்அவனை ஆக்கினைக்குட்படுத்துகிறது---தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு முன்பாக இனி ஒருபோதும் சுத்த மனச்சாட்சியுடையவனாயிருக்க முடியாது. ஏனெனில் அவன் மனந்திரும்ப மறுக்கிறான், அவன் தண்டிக்கப்பட்டவனாய் நித்திய ஆக்கினைக்குட்படுத்தப்பட்டவனாய் நிற்கிறான்.

நற்கிரியைகளைச் செய்தல்
(தீத்து 3:1-2, 9-11)

முடிவுரை

அ. ஆகவே ஒரு கிறிஸ்தவன் நன்மை செய்கிறான் என்றால், அவன் புறம்பேயிருப்பவர்கள் மற்றும் கள்ளப்போதகர்கள் தொடர்பாக எப்படி நடந்துகொள்ளுகிறான் என்பது அதில் அடங்கும்:

1. புறம்பே இருப்பவர்கள் - ஆளுபவர்கள் மற்றும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். எல்லா மனிதர்களிடமும் தயவாகவும், தாழ்மையாகவும் இருக்கவேண்டும்.

2. கள்ளப்போதகர்கள் - அவர்களையும், அவர்களுடைய புத்தியீனமான தர்க்கங்களையும் வம்ச வரலாறுகளையும் மற்றும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் பற்றிய விவாதங்களையும், சண்டைகளையும் விட்டு விலக வேண்டும்.